**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS

**Calendar Case No. 215/2019**
**Prosecution Witness**:PW1

| | | | |
|---|---|---|---|
| Name | பூங்கொடி | Caste | |
| Husband's Name | கனகராஜ் | Calling | |
| Village | பெரியகானுர் | Religion | |
| Taluk | அவிநாசி | Age | |
| District | திருப்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **22th day of May 2025** by M.Thangamani, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused present)*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.01.2019 ம் தேதி மதியம் சுமார் 01.00 மணியளவில் துணி துவைப்பதற்காக எனக்கு தெரிந்தவரின் தோட்டத்திற்கு சென்றேன். கார்த்தியும், கிருஷ்ணமூர்த்தியும் குளத்தின் அருகே நின்று கொண்டிருந்தார்கள். ஆஜர் எதிரியின் பெயர் கார்த்தி ஆகும். அவர்கள் இருவரும் குளத்திற்கு வருவாய் என நின்று கொண்டிருந்தால் தோட்டத்திற்கு செல்கிறாயா தேவடியா கண்டாரோழி என்று திட்டினார்கள். நான் அதனால் திரும்பி வீட்டிற்கு வந்துவிட்டேன். நம்பியாம்பாளையத்தில் வசிக்கும் என் அண்ணன் திருமூர்த்திக்கு போன் செய்து தகவல் சொன்னேன்.

என் அண்ணன் வந்து என்னை அழைத்து கொண்டு அவர்கள் இருவரும் நின்று கொண்டிருந்த இடத்திற்கு சென்று எதற்காக தகாத வார்த்தையால் பேசினீர்கள் என்று கேட்டார். அதற்கு என் அண்ணாவையும் தகாத வார்த்தையால் திட்டி எங்கள் இருவரையும் கொல்லாமல் விடமாட்டோம் என மிரட்டினார்கள்.

கிருஷ்ணமூர்த்தி செங்கல்லை எடுத்து அடிக்க வந்தார். நான் தடுத்தேன். அதன்பிறகு அவர்கள் இருவரில் ஒருவர் என்னை அரிவாளால் தலையில் வெட்டினார்.

என்னை வெட்டியதை பார்த்து தடுக்க வந்த என் அண்ணானை வலது காதில் வெட்டினார்கள். நான் இரத்தம் வந்ததும் மயங்கி விட்டேன். நாங்கள் இருவரும் அருகில் இருந்தவர்களின் உதவியுடன் ஆம்புலன்சில் அவிநாசி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சையில் சேர்ந்து பின்னர் எங்கள் இருவரையும் மருத்துவர்கள் திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நான் அங்கு சிகிச்சையில் இருந்த போது சேயூர் போலீசார் வந்து என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான், **அந்த புகார் வாக்குமூலம் (அ.சா.ஆ.1) ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சம்பவ சமயத்தில் எதிரிகள் பயன்படுத்திய அரிவாளை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும், அது தற்போது என்னிடம் காட்டப்படுவது தான். இரும்பு கைப்பிடியுடன் கூடிய அரிவாள் ஒன்று **(அ.சா.பொ.1) ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :–**

எனது சொந்த ஊர் பெரியகானுருக்கும், என்னை கல்யாணம் செய்து கொடுத்துள்ள தொட்டகாளம்புதுருக்கும் சுமார் 3 கிலோ மீட்டர் தொலைவு இருக்கும். சம்பவ சமயத்தில் நான் கானுரில் தான் வசித்து வந்தேன். எனக்கு சொந்த தோட்டம் எதுவும் இல்லை.

நான் எப்போதும் வீட்டிலும் துணி துவைப்பேன். சம்பவ சமயத்தில் விசேஷ நாள் என்பதால் தான் தோட்டத்தில் துணி துவைப்பதற்காக சென்று சம்பவ இடத்தில் சுமார் 4 நபர்கள் இருந்திருப்பார்கள். எனக்கும் எதிரிக்கும் முன் பகை எதுவும் இல்லை. எதிரி தாழ்த்தப்பட்ட சமூகத்தினை சேர்ந்தவர் என எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

நான் பிற்படுத்தப்பட்ட சமூகத்தினை சேர்ந்தவர் என்றால் சரிதான். எதிரி என்னை சம்மந்தம் இல்லாமல் திடீரென நான் சொல்வது போல் என்னை பேசியிருக்க வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல, அவர்கள் அந்த வழியாக போகும் பெண்களிடம் இவ்வாறு தான் பேசுகிறார்கள்.

சம்பவ இடமானது பொது மக்கள் நடமாடும் பகுதி என்றால் சரிதான். சம்பவ சமயத்தின் போது நான் அருகில் இருந்தவர்களை கூப்பிட்டேனா என்றால் அருகில் யாரும் இல்லாததால் கூப்பிடவில்லை. நான் என் அண்ணனை செல்போனில் அழைத்த

பிறகு சுமார் ½ மணிநேரம் கழித்து சம்பவ இடத்திற்கு வந்தார். என் அண்ணனை தாக்கிய எதிரியின் பெயர் எனக்கு தெரியாது.

சம்பவத்தின்போது என் அண்ணனை தாக்கிய எதிரி எந்த நிற உடை அணிந்திருந்தார் என எனக்கு ஞாபகம் இல்லை. புகார் கொடுக்க செல்லும் போது என் அண்ணன் அவரது பைக்கில் எதிரிகளை அழைத்து சென்றாரா என்றால் நான் மயங்கி விழுந்ததால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. புகார் சேயூர் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது. நான் திருப்பூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெறவில்லை என்றாலும், மருத்துவமனைக்கு சென்ற தினமும் திரும்ப வந்துவிட்டேன் என்றால் சரியல்ல, உள்நோயாளியாக தான் சிகிச்சை பெற்றேன்.

போலீசார் சம்பவ இடத்திற்கு அருகில் வசித்து வந்த சுப்ரமணியம், ராமசாமி மற்றும் சுந்தரம் ஆகியோர்களை விசாரிக்கவில்லை என்றால் எனக்கு தெரியாது. எதிரி தாழ்த்தப்பட்ட சமூகத்தினை சேர்ந்தவர் என்பதால் அவர் மீது வேண்டுமென்றே பொய்யான புகாரினை அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. ஊருக்கு பொதுவான குளத்தில் எதிரிகள் குளிக்கக்கூடாது என்பதால் நானும் என் அண்ணனும் எதிரிகளுக்கு எதிரான பொய்யான புகாரினை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

எதிரிக்கு என் மகன் வயது என்றாலும், நான் சொல்வது போல் என்னை பேசி இருக்க வாய்ப்பு இல்லை என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) A. Vijayalakshmi<br>குற்றவியல் நீதித்துறை நடுவர்(FAC),<br>அவிநாசி. |

| Free True copy of Deposition received | | |
|---|---|---|
| | | |
| Assistant Public Prosecutor | Witness | Accused/ Defence counsel |